


# பதில் சொல்ல முடியாத டி.என்.டி.ஜே

**விரைந்து வாருங்கள் முஸ்லீம்களே! கம்யூனிசம் நோக்கி .. பகுதி 3**


18 ஜூன் 20 - 26, 2014

இஸ்லாத்தை நோக்கி வா தோழா!

ஆயுதப் புரட்சி ஒன்றே தீர்வு!

தொடர் - 3

***உணர்வின் கற்பனை உரையாடல் தொடர் பகுதி மூன்றை படிக்க இங்கே சொடுக்குங்கள்.*** 3.1, 3.2

கற்பனை உரையாடலின் மூன்றாவது பகுதியில் கம்யூனிஸ்டின் வாதங்களே இடம்பிடித்திருக்கின்றன. அந்த வாதங்களுக்கு முறையான பதிலேதும் சொல்லாத அல்லது சொல்ல முடியாத சகோதரர்(!) ஃபாசில், சில இட்டு நிரப்பல்களைச் செய்துள்ளார். அவர்களின் வழக்கமான “குரானில்

## காணொளியில் புதியது



புதிய கல்விக் கொள்கை 2019க்காக மக்களை அழைக்காமல் யாருக்கும் தெரியாமல் கருத்துக் கேட்புக் கூட்டம்

## தமிழில் எழுதவேண்டுமா?

தமிழ்

Privacy & Cookies: This site uses cookies. By continuing to use this website, you agree to their use.
To find out more, including how to control cookies, see here: Cookie Policy

Close and accept

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

சாந்தியும் சமாதானமும் உடைத்த மார்க்கம்” என்பன போன்ற வழக்கமான இட்டு நிரப்பல்கள் தாம். இவைகளை விளக்கமாக பார்ப்பதற்கு முன்பு ஏற்கனவே தெளிவு படுத்திய ஒன்றுக்கு மீண்டும் ஒரு நிரூபணம் தந்திருக்கிறார்கள் அந்த கற்பனை உரையாடலில்.

அவர்களின் கற்பனை உரையாடலுக்கு ‘ஒரு கம்யூனிஸ்டுக்கும் முன்னாள் கம்யூனிஸ்டான முஸ்லீம் ஒருவருக்கும் நடந்த உரையாடல்’ என்று விளக்கமளித்திருந்தது எவ்வாறு பொய்யானது, புரட்டல்தனமானது என்பதை இத்தொடரின் முதல் பகுதியில் நிருவியிருந்தோம். இதற்கு மேலும் ஒரு சான்றாக அவர்கள் இப்படி எழுதியிருக்கிறார்கள். “.. .. இந்தப் புரட்சிகர அமைப்புகளிடம் பொறுமையாக அவர்கள் சொல்வதை புரிந்து கொண்டால்தான் மார்க்கத்தை புரிய வைக்க முடியும் .. ..” அதாவது புரட்சிகர அமைப்புகள் சொல்வதை இனிமேல் தான் புரிந்து கொள்ளவே வேண்டும் என்றால் அவர் எப்படி முன்னாள் கம்யூனிஸ்டாக இருக்க முடியும்?

இன்னொரு அம்சத்தையும் இங்கு கவனிக்க வேண்டியதிருக்கிறது. அந்த கற்பனை உரையாடலில் கம்யூனிஸ்ட் ஏல்லாவற்றையும் ஒரே சந்திப்பில் கூறிவிட முடியாது. எனவே, அடுத்த முறை இன்னும் கூடுதல் தகவல்களுடன் வருகிறேன் என்கிறார். இதை அவர் நழுவப் பார்த்தார் எனும் சொல்லால் குறிப்பிடுகிறார்கள். அடுத்த சந்திப்பு கூட நீண்ட நாட்கள் நடைபெறாமல் தேடிக் கண்டுபிடித்தது போன்ற தொனியில் எழுதியிருக்கிறார்கள். எழுதுவது கற்பனை உரையாடல், இதை ஒரு சந்திப்பு முடிந்து மறு சந்திப்பு என்று எழுதினால் அதில் எதேனும் பிழை இருக்குமா? ஆனால் எதிராளி நழுவப் பார்ப்பது போலவும், பின்னர் தேடிக் கண்டுபிடித்து உரையாடுவது போலவும் எழுத வேண்டிய அவசியம் என்ன? அவர்களின் உத்தியே இது தான். நேரடி விவாதம் என்பது, இரண்டு நாள் விவாதம் நடத்துவது எந்த முடிவும் எட்டப்படாமலேயே நாங்கள் ஜெயித்து விட்டோம் என்றும் தங்களின் அடுக்கடுக்கான ஆதாரங்களுக்கு எதிராளி பதில் சொல்ல முடியாமல் தோற்று விட்டதாகவும் அவர்களின் தளத்தில் எழுதி புளகமடைந்து கொள்வார்கள். அவ்வளவு ஏன், இவர்களின் ஆதர்ச நாயகரான பி.ஜே கூட இதே உத்தியைத்தான் பயன்படுத்துவார். மாற்றுக் கருத்துடையவர்களை விவாதத்துக்கு அழைக்கும் போது, வாருங்கள் விவாதிப்போம் சரியானதை ஏற்றுக் கொள்வோம் எனும் நாகரீக சொல்லாடல் மருந்துக்கும் அங்கு இருக்காது. மாறாக, எங்களுடன் விவாதிக்க வந்தால் அவர்களின் மடத்தனங்களை தோலுரித்துக் காட்டுவோம் என்பதாக இருக்கும் அவரின் அழைப்பு. இதை

### அஞ்சலில் வேண்டுவோர்க்கு….

இதில் உங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிந்து கொள்ளுங்கள்

Join 2,582 other followers

Enter your email address

சொடுக்கவும்

### இணைப்புகள்

- அசுரன்
- அறிவியல்புரம்
- ஏகலைவன்
- ஒளிரும் பாதை
- கம்யூனிச பூதம்
- கலகம்
- கலையகம்
- கார்க்கி
- குமரிமைந்தன்
- குருத்து
- சமரசம் உலவும் இடமே
- சர்வதேசியவாதிகள்
- சிறகுகள்
- சுனா பானா
- சூறாவளி
- செங்கொடி
- செங்கொடி மருது
- ஜெயபாரதன்
- தமிழச்சி
- தமிழ் அரங்கம்
- தமிழ் சசி
- தமிழ் பகுத்தறிவாளர்கள்
- நரேன் பார்வை
- நல்லூர் முழக்கம்
- பகடு
- பறையோசை
- பு.மா.இ.மு
- போராட்டம்
- ம(னி)தம்
- முகவரி
- வலிபோக்கன்

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

வெறும் உத்தி என்பதாகவும் சுருக்கிவிட முடியாது. இது ஒரு உளவியல் ரீதியான தாக்கம். இந்த உளவியல் தாக்கத்தினால் தான் இஸ்லாமிய இளைஞர்களிடம் இவரின் செல்வாக்கு அதிகரித்தது. போகட்டும். அந்த கற்பனை உரையாடலுக்கு திரும்புவோம். மெய்யாக அந்த கம்யூனிஸ்டின் வாதங்களுக்கு பதில் சொல்லாமல் நழுவியிருப்பது யார்? விசிலடிச்சான் குஞ்சுகளை விட்டுவிடுவோம், அந்த கற்பனை உரையாடலை படித்துக் கொண்டிருக்கும் நியாய உணர்ச்சியுள்ள இஸ்லாமியர்கள் மீது கேள்விகளைப் போடுவோம்.

குரானில் அனைத்துக்கும் தீர்வுண்டா? குரான் என்பது என்ன? ஆண்டான் அடிமை காலகட்டத்தில் வாழ்ந்த ஒருவர் 14 நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய, நீதி போதனைகள் கொண்ட, ஆறாயிரத்துச் சொச்சம் வசனங்களின் தொகுப்பு. அதில் எதற்கு என்ன விதத்தில் தீர்வு இருக்கிறது? அந்த காலகட்டத்தில் வாழ்ந்த ஒருவரின் அறிவளவும் முதிர்ச்சியையும் தவிர்த்து வேறு ஏதாவது அதில் வெளிப்பட்டிருக்கிறதா? ஒரு மதத்தின் வேதம் எனும் அடிப்படையில் அந்த மதத்தில் இருப்பவர்களுக்கு அந்த வேதத்தில் மிகையான நம்பிக்கைகள் இருக்கலாம். ஆனால், அதுவே உண்மையாக இருக்க வேண்டுமென்று எந்த அவசியமும் இல்லை. ஒரு மத நம்பிக்கையை பொது உண்மையாக முன்வைப்பது மதவாதிகளுக்கு கைவந்த கலை. அந்த அடிப்படையில் வருவது தான் குரானில் அனைத்துக்கும் தீர்வுண்டு என்பதும்.

அடுத்து, விவாதம் குறித்து இந்த கற்பனை உரையாடல்காரர்கள் விதந்தோதுவதும் இவ்வாறுதான் இருக்கிறது. விவாதம் என்பது என்ன? மாறுபட்ட கருத்துடைய இருவர் தத்தமது வாதங்களை எது சரியானதோ அதை தவறான நிலைப்பாட்டில் இருப்பவர் உணரும் விதத்தில் எடுத்து வைப்பது தான் விவாதம். ஆனால், இந்த கற்பனை உரையாடல்காரர்கள் செய்த அத்தனை விவாதங்களையும் பாருங்கள். தி.கவினருடன் நடந்த விவாதமாகட்டும், ஜமாலி குழுவுடன் நடந்த விவாதமாகட்டும், கிருஸ்தவர்களுடன் நடந்த விவாதமாகட்டும் இந்த விவாதங்கள் எதிலும் தெளிவு இருந்ததுண்டா? ஒரு பிரச்சனையை முன்வைத்து எது சரி எது தவறு எனும் ரீதியில் விவாதம் நகர்ந்து முடிவு எட்டப்பட்டதுண்டா? திகவினருடன் நடத்திய விவாதத்தை எடுத்துக் கொண்டால் புராக் விமானமும் புஷ்பக விமானமும் என்ற பெயரில் உண்மை இதழில் வெளிவந்த கட்டுரையில் இருந்து தொடங்கியது அந்த விவாதம். பார்ப்பனிய புராணங்களில் இருக்கும் புஷ்பக விமானமும், இஸ்லாமிய புராணத்தில் இருக்கும் புராக் விமானமும் ஒன்றுதான், இரண்டும் புராணக்


- வலையுகம்
- விடுதலை
- வினவு வினை செய்
- வில்லவன்
- விவாதக்களம்
- வே.மதிமாறன்
- DR. ருத்ரன்
- superlinks


## அண்மைய பின்னூட்டங்கள்


- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: த... இல் செங்கொடி
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத... இல் Vanamuthan
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத... இல் Melchizedek
- மக்காவின் பாதுகாப்பு: குரானின்... இல் Mydeen
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத... இல் Nirmal
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத... இல் Nirmal
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத... இல் Raja NT
- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: த... இல் C SUGUMAR
- பகத் சிங் மீண்டும் சுவாசி... இல் செங்கொடி
- பகத் சிங் மீண்டும் சுவாசி... இல் Sam charly
- பூமி உருண்டை என யார் சொன்னது: ... இல் DINAKAR
- முகம்மதும் ஆய்ஷாவும் இல் பெரியார் தடி
- செங்கோட்டை தாக்குதல்: பெரியாரி... இல் வெங்காய ராமசாமி
- உழைக்கும் மக்களின் வெற்றியைச்... இல் அப்துல்லாஹ்
- தீண்டத்தகாதவர்கள் காந்தியிடம்... இல் Arinesaratnam Gowrik...


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

குப்பைகள் என்ற அடிப்படையில் எழுதப்பட்டிருந்த அந்தக் கட்டுரைக்காக உணர்வு இதழில் பதினேழு வாரங்கள் தொடர் கட்டுரை எழுதினார்கள், ஆனால் மறந்தும் கூட முகம்மது நபி பறந்த புராக் விமானம் குறித்து அதில் எழுதவில்லை. இதன் தொடர்ச்சியாகத் தான் நேரடி விவாதம் நடந்தது. அதிலும் கூட புராக் விமானம் பற்றிய பேச்சே இடம்பெறவில்லை. எதை முன்வைத்து விவாதம் தொடங்கியதோ அது குறித்த பேச்சே இடம்பெறவில்லை என்றால் அந்த விவாதத்தின் பொருள் என்ன? நோக்கம் என்ன?

ஜமாலி குழுவினருடன் அல்லாவுக்கு உருவம் உண்டா என்று விவாதம் நடத்தினார்கள். இரண்டு தரப்பிலிருந்தும் மாறி மாறி ஹதீஸ்களை எடுத்துக் காட்டினார்கள். உணர்ச்சிவசமாய் பேசினார்கள். நேரம் முடிந்தது, கலைந்து சென்றுவிட்டார்கள், அவ்வளவு தான். இதை விவாதம் என்பதா? அக்கப்போர் என்பதா? கிருஸ்தவர்களுடன் எது உண்மையான இறை வேதம் என்ற தலைப்பில் நடந்த விவாதத்திலும் அதே கதை தான். ஒரு பகுதி நடந்து முடிந்ததும் நிகழ்த்தப்பட்ட அரசியல் விளையாட்டுகள் .. .. இது போல் இன்னும் ஏராளமான விவாதங்களை களியக்காவிளையில் தொடங்கி சுட்டிக் காட்டலாம். இதை வைத்துக் கொண்டுதான் விவாதம் நடத்தி எதிராளிகளுக்கு மார்க்கத்தை புரியவைத்துவிட்டதாய் இறும்பூறெய்திக் கொள்கிறார்கள்.

இது போலத்தான் இஸ்லாம் சமாதானத்தை கொண்டு வந்த மார்க்கம் என்பதும், முகம்மது மதீனாவில் அரசரானது தொடங்கி மரிக்கும் வரையில் பல வழிப்பறி ஆயுதச் சண்டைகளை நடத்தியிருக்கிறார். அவர் மரணத்தின் பிறகான இருநூறாண்டு கால வரலாறு வாரிசுரிமைச் போர்களால் இரத்தத்தில் தோய்ந்தது. இன்றுவரை அவர் பெயரைச் சொல்லி இயங்கிக் கொண்டிருக்கும் இஸ்லாம் பல்வேறு பிரிவுகளைக்கண்டு சமாதானமில்லாம் ஒருவரை ஒருவர் முஸ்லீமல்ல என்று விலக்கிக் கொண்டும், அதனால் ஏகாதிபத்தியத்தின் கைகளில் சிக்கிக் கொண்டு ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கும் சூழல்வரை எடுத்துக் கொண்டால், என்ன சமாதானத்தைக் கொண்டு வந்தது இஸ்லாம்? பொருளாதாரச் சமாதானத்தையா? அரசியல் சமாதானத்தையா? என்ன சமாதானத்தைக் கொண்டு வந்தது இஸ்லாம்? தொடங்கிய காலம் முதல் இன்றுவரை மக்களுக்கு எந்த சமாதானத்தையும் கொடுக்காத இஸ்லாத்தை, சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டு வந்த மார்க்கம் என்று கூறுவது உள்ளீடற்ற, அரசியலற்ற, புரட்டல்வாத வெற்று மதவாதிகளின் கூற்று. எவ்வாறென்றால் மக்களுக்கு சாந்தியையும், சமாதானத்தையும் கொண்டு

## நேயர் விருப்பம்


அத்தி வரதா எங்களுக்கு அறிவு வராதா

மணமக்களை அழைக்காத திருமணம்

ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்
நூலகம்


வால்காவிலிருந்து கங்கை வரை

பொன்னர் சங்கர் யாருக்காக?

முகம்மதும் ஆய்ஷாவும்

நான் ஏன் பிஜேவுடன் நேரடிவிவாதம் செய்ய விரும்பவில்லை?

சுதந்திரம் என்றொரு கற்பிதம்

பட்ஜெட்: யானை மிதித்து விழுந்த நிதி ஓட்டை

## வருகைப் பதிவேடு

777,555 பார்வைகள்

தேடல் …

## தேர்வு செய்க

- அசை படங்கள் (6)
- அறிமுகம் (9)
- அறிவிப்பு (1)
- உணர்வு மறுப்புரை (11)
- கடையநல்லூர் (1)
- கட்டுரை (324)
  - உக்ரைன் (6)
  - மொழிபெயர்ப்பு (2)
- கதை (5)
- கம்யூனிசம் (18)
  - அர.நீலகண்டன் (1)
- கவிதை (16)
- காணொளி (19)

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

வரவேண்டுமென்றால் அது அரசியலால், சமூக மாற்றத்தால், மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று தன் சொந்தக் கரங்களால் போராடிப் பெறும் சமூக மாற்றத்தினால் மட்டுமே சத்தியம். வரலாற்றிலிருந்து இதை எளிதாக கண்டு கொள்ள முடியும். முஸ்லீம் உழைக்கும் மக்கள் கண்டு கொள்ள முன்வர வேண்டும்.

அந்த கற்பனை உரையாடலின் மூன்றாவது பகுதியில் அவர்களே உருவாக்கிய பாத்திரமான கம்யூனிஸ்டின் வாதம் என்ன? உலகில் உழைக்கும் மக்களின் உழைப்பை, வியர்வையை சுரண்டிக் கொழுக்கிறது பணக்கார வர்க்கம். இந்த சுரண்டலை அந்த பணக்கார வர்க்கம் சட்டபூர்வமான வழிகளில் செய்கிறது. இதை எதிர்த்து போராடுபவர்களை ஒடுக்கவே அரசு இருக்கிறது. இதை மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் மூலமல்லாது, சமூகப் புரட்சியின் மூலமல்லாது வேறு எந்த வழிகளிலும் போக்குவது சாத்தியமில்லை. இது தான் அந்த கம்யூனிச வாதத்தின் சாராம்சம். இதற்கு அந்த கற்பனை உரையாடல்வாதிகள், மதவாதிகள் கொடுத்த பதில் என்ன? ஒன்றுமில்லை. பதில் கூற முடியாமையை மறைக்கத்தான் மேற்கண்ட இட்டுநிரப்பல்களும், மதவாத சவடால்களும். எச்சரிக்கிறோம், மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றுவது அத்தனை எளிதல்ல.

**இத்தொடரின் முந்திய பகுதிகள்:**

*1. கற்பனை உரையாடலல்ல, காத்திரமான சொல்லாடல்*

*2. கருத்து பயங்கரவாதம் செய்யும் டி.என்.டி.ஜே*

## *மின்னூலாக(PDF) தரவிறக்க*

---

Rate this:
0 0 தரப்படுத்தவும்

---

பகிர்க:

Twitter Facebook WhatsApp Email Skype Print LinkedIn Reddit

---


- காலண்டர் (2)
- கேள்வி பதில் (13)
- ஜெயமோகன் வன்முறை (5)
- திரைப்பட மதிப்புரை (21)
- நூல்கள்/வெளியீடுகள் (67)
  - இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் (32)
  - கம்யூனிஸ்டின் உருவாக்கம் (15)
- படங்கள் (14)
- புதிய ஜனநாயகம் (14)
- மதம் (105)
  - இஸ்லாம்: கற்பனைக்கோட்டை (58)
  - செங்கொடியல்ல இஸ்லாமே கற்பனைகளின் களம் (22)
- முகநூல் நறுக்குகள் (3)
- முழக்கம் (9)


### நூலகத்தில் புதியது




புதிய கல்விக் கொள்கை வரைவு 2019

### தொடர்புக்கு


மின்னஞ்சல் முகவரி:

**senkodi002@gmail.com**

senkodithamizhan@gmail.com


### பிப்ரவரி 2015

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

★ Like

Be the first to like this.

**PUBLISHED BY** செங்கொடி



செங்கொடி எழுதிய எல்லா இடுகைகளையும் பார்க்கவும்

Posted on 03/02/2015
Posted in உணர்வு மறுப்புரை, மதம்
குறிச்சொல்லிடப்பட்டது ஆயுதப் போராட்டம், உணர்வு, கம்யூனிசம், குரான், சமாதானம், டி.என்.டி.ஜே, புரட்சி, புரட்சிகர அமைப்புகள், பொய், ஹதீஸ்.



[முகம்மதுநபி முதலாளித்துவத்தின் கைக்கூலியா? டி.என்.டி.ஜேவே பதில் சொல்](#)

In "கட்டுரை"



[‘உணர்வு’ கும்பலிடம் வரலாற்றறிவை எதிர்பார்க்க முடியுமா?](#)

In "உணர்வு மறுப்புரை"




[துரோகி முகம்மதா? மார்க்ஸா? டி.என்.டி.ஜே பதில் சொல்லுமா?](#)

In "உணர்வு மறுப்புரை"

முந்தைய
முகம்மதின் மக்கா வாழ்வும், அவரின் புலப் பெயர்வும்

அடுத்து
கள்ள உறவுக்குள் ஒழியும் கடவுள்

## உங்கள் கருத்தின் மூலம் என்னை மேம்படுத்துங்கள்

| தி | செ | பு | விய | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | |
| « டிசம்பர் | | | | மார்ச் » | | |

## அண்மைய பதிவுகள்

- அத்தி வரதா எங்களுக்கு அறிவு வராதா
- மணமக்களை அழைக்காத திருமணம்
- பட்ஜெட்: யானை மிதித்து விழுந்த நிதி ஓட்டை
- ஒரே நாடு, ஒரே கா(ர்)டு, ஒற்றே .. .. .. போடு
- பெருவெளியின் தூசு
- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: தரமா? தராதரமா?
- முகிலன் எங்கே?
- ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது நடத்தப்பட்டது என்ன? யார் அந்த சமூக விரோதிகள்?
- புல்வாமா தாக்குதல்: கேள்விகளை எழுப்புவோம்
- காதலர் தினம்: சமூகத்தையும் காதலிப்போம்
- காலம் – ஒரு வரலாற்றுச் சுருக்கம்
- கார்ப்பரேட் – காவி பாசிசம் எதிர்த்து நில்
- உழைக்கும் மக்களின் வெற்றியைச் சாதிப்போம்!
- தீண்டத்தகாதவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?
- காந்தி யார்?

## பிரிவுகள்

- அசை படங்கள் (6)
- அர.நீலகண்டன் (1)
- அறிமுகம் (9)
- அறிவிப்பு (1)
- இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் (32)
- இஸ்லாம்: கற்பனைக்கோட்டை (58)
- உக்ரைன் (6)

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

Enter your comment here...


- உணர்வு மறுப்புரை (11)
- கடையநல்லூர் (1)
- கட்டுரை (324)
- கதை (5)
- கம்யூனிசம் (18)
- கம்யூனிஸ்டின் உருவாக்கம் (15)
- கவிதை (16)
- காணொளி (19)
- காலண்டர் (2)
- கேள்வி பதில் (13)
- செங்கொடியல்ல இஸ்லாமே கற்பனைகளின் களம் (22)
- ஜெயமோகன் வன்முறை (5)
- திரைப்பட மதிப்புரை (21)
- நூல்கள்/வெளியீடுகள் (67)
- படங்கள் (14)
- புதிய ஜனநாயகம் (14)
- மதம் (105)
- முகநூல் நறுக்குகள் (3)
- முழக்கம் (9)
- மொழிபெயர்ப்பு (2)

## காப்பகம்

- ஜூலை 2019 (5)
- பிப்ரவரி 2019 (7)
- நவம்பர் 2018 (1)
- ஒக்ரோபர் 2018 (2)
- செப்ரெம்பர் 2018 (2)
- மே 2018 (4)
- ஏப்ரல் 2018 (3)
- மார்ச் 2018 (4)
- பிப்ரவரி 2018 (2)
- ஜனவரி 2018 (3)
- திசெம்பர் 2017 (2)
- நவம்பர் 2017 (5)
- ஒக்ரோபர் 2017 (1)
- செப்ரெம்பர் 2017 (7)
- ஓகஸ்ட் 2017 (2)
- ஜூலை 2017 (3)
- ஜூன் 2017 (4)
- மே 2017 (4)
- ஏப்ரல் 2017 (4)
- மார்ச் 2017 (5)
- பிப்ரவரி 2017 (5)
- ஜனவரி 2017 (8)
- திசெம்பர் 2016 (6)
- நவம்பர் 2016 (8)
- ஒக்ரோபர் 2016 (4)
- செப்ரெம்பர் 2016 (4)
- ஓகஸ்ட் 2016 (3)
- ஜூலை 2016 (5)
- ஜூன் 2016 (5)
- மே 2016 (4)


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

- ஏப்ரல் 2016 (5)
- மார்ச் 2016 (6)
- பிப்ரவரி 2016 (4)
- ஜனவரி 2016 (5)
- டிசெம்பர் 2015 (3)
- நவம்பர் 2015 (4)
- ஒக்ரோபர் 2015 (2)
- செப்ரெம்பர் 2015 (3)
- ஓகஸ்ட் 2015 (1)
- ஜூலை 2015 (2)
- ஜூன் 2015 (3)
- மே 2015 (6)
- ஏப்ரல் 2015 (6)
- மார்ச் 2015 (5)
- பிப்ரவரி 2015 (7)
- டிசெம்பர் 2014 (1)
- நவம்பர் 2014 (1)
- ஒக்ரோபர் 2014 (2)
- ஜூன் 2014 (1)
- மே 2014 (1)
- மார்ச் 2014 (5)
- பிப்ரவரி 2014 (1)
- ஜனவரி 2014 (1)
- டிசெம்பர் 2013 (3)
- நவம்பர் 2013 (2)
- ஒக்ரோபர் 2013 (5)
- செப்ரெம்பர் 2013 (3)
- ஓகஸ்ட் 2013 (5)
- ஜூன் 2013 (3)
- மே 2013 (1)
- ஏப்ரல் 2013 (5)
- மார்ச் 2013 (4)
- பிப்ரவரி 2013 (4)
- ஜனவரி 2013 (6)
- டிசெம்பர் 2012 (1)
- நவம்பர் 2012 (5)
- ஒக்ரோபர் 2012 (3)
- செப்ரெம்பர் 2012 (7)
- ஓகஸ்ட் 2012 (5)
- ஜூலை 2012 (8)
- ஜூன் 2012 (1)
- மே 2012 (10)
- ஏப்ரல் 2012 (5)
- மார்ச் 2012 (4)
- ஜனவரி 2012 (10)
- டிசெம்பர் 2011 (9)
- நவம்பர் 2011 (8)
- ஒக்ரோபர் 2011 (9)
- செப்ரெம்பர் 2011 (10)
- ஓகஸ்ட் 2011 (10)
- ஜூலை 2011 (2)
- ஜூன் 2011 (5)
- மே 2011 (6)
- ஏப்ரல் 2011 (7)
- மார்ச் 2011 (9)


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

- பிப்ரவரி 2011 (9)
- ஜனவரி 2011 (10)
- திசெம்பர் 2010 (9)
- நவம்பர் 2010 (8)
- ஒக்ரோபர் 2010 (9)
- செப்ரெம்பர் 2010 (8)
- ஓகஸ்ட் 2010 (9)
- ஜூலை 2010 (9)
- ஜூன் 2010 (9)
- மே 2010 (8)
- ஏப்ரல் 2010 (9)
- மார்ச் 2010 (7)
- பிப்ரவரி 2010 (6)
- ஜனவரி 2010 (8)
- திசெம்பர் 2009 (6)
- நவம்பர் 2009 (5)
- ஒக்ரோபர் 2009 (7)
- செப்ரெம்பர் 2009 (5)
- ஓகஸ்ட் 2009 (3)
- ஜூலை 2009 (1)
- ஜூன் 2009 (3)
- மே 2009 (7)
- ஏப்ரல் 2009 (6)
- மார்ச் 2009 (6)
- பிப்ரவரி 2009 (7)
- ஜனவரி 2009 (18)
- திசெம்பர் 2008 (30)
- நவம்பர் 2008 (1)

## தொடர்க




## இன்னும் தேடலாமே

தேடல் …

## வெளியேறும் முன்

**நண்பர்களே,**

*அனைவருக்கும், அனைத்தின் மீதும் கருத்து இருக்கும் என எண்ணுகிறேன். இத்தளம் குறித்தும் உங்களுக்கு நன்றாகவோ, நன்றல்லதாகவோ கருத்து இருக்கலாம். எதுவாகிலும் அதை நீங்கள் பின்னூட்டமாக பகிரலாம். அல்லது வெளிப்படையாக பகிரப்பட வேண்டாம் என எண்ணினால் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் என்னுடைய மின்னஞ்சலுக்கு தெரிவியுங்கள். நீங்கள் கூறப்போகும் கருத்துக்காக காத்திருக்கிறேன்.*

நன்றி.

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

Create a free website or blog at WordPress.com.

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!